From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. No.14 /2012

Deposition of witness for: PW - 13

| | | | |
|---|---|---|---|
| Name | : Narayanan | Father/Husband Name | : Arulappan |
| Caste | : | Calling | : Doctor |
| Religion | : | Age | : |
| Date | : 24.02.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

**(A5,6,7 are present. A1 to A4,A8, A9 2 absent petition U/s. 317 Crpc is filed and allowed)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவமனை கல்லூரியில் உதவிப்பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.06.11ம் தேதி மேலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக அன்றையதினம் இரவு 10.15 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது சுமார் 48 வயது மதிக்கத்தக்க ராஜாமுகமது என்பவர் இடதுகை கைப்பகுதியில் வீக்கக்காயமும், வலதுகால் பெருவிரலில் சிறாய்ப்பு காயத்துடனும் வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் அப்போது தன்னை தெரிந்த 15 நபர்கள் குச்சியாலும், அருவாலாளும் அன்றையதினம் சுமார் 09.45 மணியளவில் அவரது வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இடதுகை எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததாக சான்று வழங்கியுள்ளார். அதில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்துரை வழங்கியுள்ளார். அதனடிப்படையில் நான் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்ற வழங்கினேன். **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அன்றையதினம் இரவு 10.15 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது சுமார் 40 வயது மதிக்கத்தக்க ரஹ்மது நஷா என்பவர் வலதுகையில் வலி இருப்பதாக காயத்துடனும் வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் அப்போது தன்னை தெரிந்த 15 நபர்கள் குச்சியாலும், அருவாலாளும் அன்றையதினம் சுமார் 09.45 மணியளவில் அவரது

வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு வலதுகை பின்புறம் 4x1x1 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சாதாரண காயம் என்று கருத்துரை வழங்கியுள்ளார். அதனடிப்படையில் நான் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்ற வழங்கினேன். **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அன்றையதினம் இரவு 10.30 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது சுமார் 50 வயது மதிக்கத்தக்க சேக்முகமது என்பவர் தலையில் காயத்துடனும் வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் அப்போது தன்னை தெரிந்த 15 நபர்கள் குச்சியாலும், அருவாலாளும் அன்றையதினம் சுமார் 09.45 மணியளவில் அவரது வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு தலையில் 1x1x1 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று கருத்துரை வழங்கியுள்ளார். அதனடிப்படையில் நான் மேற்படி நபருக்கு ஏற்பட்ட சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அன்றையதினம் இரவு 10.45 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது சுமார் 30 வயது மதிக்கத்தக்க யாஷ்மின்பீவி என்பவர் வலதுகை, தலை மற்றும் இடதுகையில் காயத்துடன் வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் அப்போது தன்னை தெரிந்த 15 நபர்கள் குச்சியாலும், அருவாலாளும் அன்றையதினம் சுமார் 09.45 மணியளவில் அவரது வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு வலதுகையின் பின்புறம் 1x1 செ.மீ. அளவில் ஒரு சிறாய்ப்பு காயம் காணப்பட்டது. மற்றும் இடதுகையில் 5x3 செ.மீ. அளவில் சிறாய்ப்பு காயம் காணப்பட்டது. தலையில் ஊமைக்காயம் ஏற்பட்டிருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று கருத்துரை வழங்கியுள்ளார். அதனடிப்படையில் நான் மேற்படி நபருக்கு ஏற்பட்ட சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(அந்த**

**காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அன்றையதினம் இரவு 10.45 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது சுமார் 30 வயது மதிக்கத்தக்க பர்வீன்ரோஜா என்பவர் இடதுகை மற்றும் முதுகில் காயத்துடனும் வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் அப்போது தன்னை தெரிந்த 15 நபர்கள் குச்சியாலும், அருவாலாளும் அன்றையதினம் சுமார் 09.45 மணியளவில் அவரது வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு இடதுஜகயில் 5x3 செ.மீ. அளவில் ஒரு சிறாய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தபோது அவர் செல்ல மறுத்துவிட்டு மேலூர் அரசு மருத்துவமனையிலேயே உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். அவருக்கு ஏற்பட்ட ஏற்பட்ட சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அன்றையதினம் இரவு 10.54 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது சுமார் 40 வயது மதிக்கத்தக்க மதினாபேகம் என்பவர் இரண்டு மணிக்கட்டிரும் வீக்கம் மற்றும் வலி இருப்பதாக வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் அப்போது தன்னை தெரிந்த 15 நபர்கள் குச்சியாலும், அருவாலாளும் அன்றையதினம் சுமார் 09.45 மணியளவில் அவரது வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு வெளிக்காயம் எதுவும் இல்லை. ஆனால் அவருக்கு 2 மணிக்கட்டிலும் வீக்கம் மற்றும் ஊமைக்காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செயதேன். அங்கு அவர் சிகிச்சை பெற்றபோது எவ்வித அனுமதியுமில்லாமல் தன்னிச்சையாக மருத்துவமனையைவிட்டு சென்றுவிட்டதால், அவருக்கு ஏற்பட்ட ஏற்பட்ட காயத்தின் தன்மைகுறித்து கருத்துரை வழங்க இயலவில்லை என்று கூறியுள்ளார். அதனடிப்படையில் நானும் மேற்கண்ட நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைகுறித்து சான்று வழங்க இயலவில்லை. **(நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அன்றையதினம் இரவு 11.00 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது சுமார் 45 வயது மதிக்கத்தக்க சேட்டு என்பவர் வலதுகையில் காயத்துடன் வந்தரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் அப்போது தன்னை தெரிந்த 15 நபர்கள் குச்சியாலும், அருவாலாளும் அன்றையதினம் சுமார் 09.45 மணியளவில் அவரது வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு இடதுகையில் Puncture wound காணப்பட்டது.

அவருக்கு மேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போது அவர் மருத்துவரின் எவ்வித அனுமதியுமில்லாமல் மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டார். அதனால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைகுறித்து சான்று வழங்க இயலவில்லை. **(நான் வழங்கியள விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அன்றையதினம் இரவு 11.00 மணிக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது சுமார் 45 வயது மதிக்கத்தக்க சேட்டு என்பவர் வலதுகையில் காயத்துடன் வந்தரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவர் அப்போது தன்னை தெரிந்த 15 நபர்கள் குச்சியாலும், அருவாலாளும் அன்றையதினம் சுமார் 09.45 மணியளவில் அவரது வீட்டின் அருகே தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு இடதுகையில் Puncture wound காணப்பட்டது. அவருக்கு மேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போது அவர் மருத்துவரின் எவ்வித அனுமதியுமில்லாமல் மருத்துவமனையிலிருந்து சென்றுவிட்டார். அதனால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைகுறித்து சான்று வழங்க இயலவில்லை. **(நான் வழங்கியள விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை: ( 1 முதல் 9 எதிரிகள்தரப்பில்)**

நான் சிகிச்சை அளித்ததாக சொல்லப்படும் மேற்படி நபர்கள் தங்களை உருட்டுக்கட்டை மற்றும் கத்தியால் எதிரிகள் தாக்கினார்கள் என்று எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். குச்சியாலும், அருவானாலும் தாக்கியதாக சொல்லியுள்ளனர். காயம்பட்ட ராஜாமுகமது தன்னை குச்சியை வைத்து தாக்கியதாக சொல்லியுள்ளதால் அவருக்கு மேற்படி குச்சியை வைத்து தாக்கினால் எலும்புமுறிவு ஏற்பட வாய்ப்பில்லை என்றால் குச்சி மட்டும் வைத்து அடித்தால் எலும்புமுறிவு ஏற்பட வாய்ப்பில்லை. ராஜாமுகமதுவிற்கு அருவாளால் தாக்கப்பட்ட வெட்டுக்காயம் ஏதுவும் இல்லை என்றால் சரிதான். ராஜாமுகமதுவை நிறைய நபர்கள் மொத்தமாக சேர்ந்து விரட்டிவரும்போது அவர் ஓடி தவறி சிமின்டாலான கழிவுநீர் வாய்க்காலில் விழுந்தால் அவருக்கு மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

காயம்பட்ட மற்ற நபர்களுக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் சிறாய்ப்பு காயங்கள் தவறி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. காயம்பட்ட நபர்கள் வலி இருப்பதாக சொல்லியுள்ளதால் அந்த வலி பாசாங்காகக்கூட இருக்கலாம் என்றால் வாய்ப்புள்ளது. காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்தின் வயதுகுறித்து நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயம்பட்டதாக சொல்லப்படும் சேட்டு என்பவருக்கு ஏற்பட்ட Puncture wound என்பது

அவர் தவறி விழும்போது கீழே இருந்த ஆணி போன்ற இரும்பு பொருட்கள் குத்தியிருந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. காயம்பட்ட ரஹமத் நிஷா கீழே தவறி விழுந்திருந்தால் அவருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் சிதைந்த காயம் எற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு.

காயம்பட்ட நபர்கள் அணைவரும் கூட்டமாக ஒரு கும்பல் துரத்தி வரும்போது இவர்கள் அணைவரும் ஓடும்போது தவறி கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்றால் வாய்ப்புள்ளது.